**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.191/17** P.W. 11

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. செந்தமிழ் | Father's / Husband Name . சதாசிவம் | |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :01.08.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 01.08.2019.

**முதல் விசாரணை.**

நான் செம்பகராயநல்லூரில் கீழக்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் மலேசியாவில் சமையல் வேலை செய்கிறேன். சம்பவம் நடந்தபொழுது நான் ஊரில் இருந்தேன். அசா.1 பன்னீர்செல்வத்தை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா.1னிக்கும் எதிரிகளுக்கும் நடந்த சம்பவம் குறித்து எனக்கு எதவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுகிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் போலிசார் விசாரணையின்போது 11.9.2010ம் தேதி அசா.1 பன்னீர்செல்வம் வீட்டிற்கு எதிர்புறம் உள்ள சனிகிழமை சந்தையில் நான் நின்று கொண்டிருந்தபோது அப்போது செண்பகராமன், குஞ்சி என்ற வெற்றிவேல், சக்திவேல் ஆகிய மூவரும் பகல் 11.45 மணியளவில் தங்கள் கைகளில் கடப்பாரை, மண்வெட்டி, கட்டையுடன் பன்னீர்செல்வம் வீட்டிற்கு தென்புறம் உள்ள காம்பவுண்ட் சுவரை உடைக்கும் பொறுட்டு அங்கு வந்து நின்றபோது அசா.1 பன்னீர்செல்வம் அவர்களை பார்த்து ஏன் என் வீட்டு காம்பவண்ட் சுவரை உடைக்கபோகிறீர்கள் என்று கேட்டார் என்றும் அப்போது எதிரி குஞ்சி என்ற வெற்றிவேல் அசா.1ஐ பார்த்து காமகுரோத வார்தைகள் சொல்லி திட்டி போற பாதையை அடைத்து வைக்கிறாயே நாயே என்று திட்டி கீழேப்போட்டிருந்த இரும்பு கடப்பாரையை எடுத்து இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி பன்னீர்செல்வத்தின் தலையில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் அப்பொழுது மற்ற இரண்டு எதிரிகளான செண்பராமன், சக்திவேல் ஆகிய இருவரும் அசா.1ஐ பார்த்து அசிங்கமாக திட்டியும் செண்பகராமன் வலது பக்க கையிலும் சக்திவேல் வலது பக்க காலிலும் உருட்டு கட்டையால் அடித்தார்கள் என்றும் இதை பார்த்த அசா.1 பன்னீர்செல்வத்தின் மனைவி சத்தம்போட்டார் என்றும் நானும் சோமசுந்தரம் மகன் பன்னீர்செலவமும், ராகவன் ஆகியோர்கள் சென்று பார்த்தபோது அசா.1னின் தலையில் ரத்த காயத்துடன் கீழே மயங்கி கிடந்தார் என்றும் எதிரிகள் இரும்பு கடப்பரை, மண்வெட்டி, கட்டை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள் என்றும் காயம்பட்ட பன்னீர்செல்வத்தை சிகிச்சைக்காக நாங்கள் நாகை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு

ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் தூரத்து பங்காளி என்பதால் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை**.

. காயம்பட்ட பன்னீர்செல்வம் எனது தூரத்து உறவான பெரியப்பா வீட்டு அக்கா மகன் ஆகும்.

**மறுவிசாரணை இல்லை**.